## தலைப்பு 6 – அரசாங்க சேவை ஆணைக்குழு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 08 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்

கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பாரயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பொதுக்கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் இலக்கம் 2021/03 பிரகாரம் நிதிக்கூற்றுக்களினை தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகிப்போன ஒரு சந்தர்ப்பத்தினை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய பொதுக் கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/03 கொண்ட சுற்றறிக்கையின் 7.2 பந்தியின் பிரகாரம் ஏனைய வருமானங்களினை கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தினை நிதிச் செயலாற்றுக்கைக் கூற்றில் உட்படுத்தப்படக்கூடாததுடன் அவ்வருமானத்தினை கட்டுநிதி இணக்கக்கூற்றினுள் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆயினும் ஆணைக்குழுவினால் | நிதிக்கூற்றுக்களில் இச் சீராக்கலினை சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

ரூபா 12,083,607 ஆன அவ்வருமானத்தினை ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு பெறுவனவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி ஆணைக்குழுவினால் நிதிசாரா சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானம் மேலும் தேறிய சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கீடு பெறுமானம் ரூபா 854,117,343 ஆக இருந்த போதிலும் ஆணைக்குழு அதனை நிதிக்கூற்றில் ரூபா 815,117,344 ஆக பதியப்பட்டிருந்தது. | வாகனங்களை கையளித்தல் மற்றும் கையேற்றல் 2021.12.31 திகதியளவில் நடைபெற்ற போதிலும் அவற்றினை பெற்றுக் கொடுக்கும் மற்றும் பெற்றுக் கொள்ளும் உத்தரவினை கிடைக்கப் பெறாத காரணத்தினால் 2021 நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை கையளித்தல் மற்றும் கையேற்றல் நிகழ்வினை முடிந்தவுடன் அவற்றினை பெற்றுக் கொடுக்கும் மற்றும் பெற்றுக் கொள்ளும் உத்தரவினை பெற்று சரியான பெறுமானத்தினை கணக்கிலிடப்பட வேண்டும். |

#### (ஆ) எல்லை மீறல்

அரச அதிகாரிகளினது முற்பண கணக்கின் எல்லை மீறல் தொடர்பாக கீழுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 இலக்கம் 7 கொண்ட ஒதுக்கீடு சட்டமூல கணக்கின் இலக்கம் 00601 படி அதிகாரம் அளிக்கப்பட்ட ஆகக்கூடிய பற்றுமீதி எல்லை ரூபா 38,000,000 ஆன போதிலும் உண்மையான பற்றுமீதி ரூபா 41,763,063 ஆகின்ற படியால் ரூபா 3,763,063 க்கான ஆகக்கூடிய பற்று எல்லையினை விஞ்சியிருந்ததுடன் அந்த ஆகக்கூடிய பற்று மீதி எல்லையினை திருத்துவதற்கான | ஆகக்கூடிய பற்று எல்லையினை ரூபா 43,000,000 வரை திருத்தியமைத்து தருமாறு 2021.11.30 திகதிய இலக்கம் PSC/ACC RO4/01/03/2021 கடிதம் மூலமாக கோரப்பட்டுள்ளது. அக்கடிதத்தினை அனுமதியினைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக | ஆகக்கூடிய பற்று எல்லையினை விஞ்சப்படாது அல்லது எல்லையினை திருத்துவதற்காக அனுமதியினை பெறப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பாராளுமன்ற அனுமதியினை பெற்றிருக்கவில்லை. | தெரிவித்து வரவு செலவு திணைக்களத்தினால் BD/AA/LR/01/2022 இலக்கம் கொண்ட 2021.12.31 திகதிய கடிதம் மூலம் அறியத் தரப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 அமைய சரியான செலவின மதிப்பீடுகள் இயலுமான வரையில் முழுமையாக சரியான முறையில் தயாரிக்கப்பட்டள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் விசேட பொறுப்பாக உள்ள போதிலும் ஆணைக்குழுவினால் 2104 செலவின விடயத்தின் கீழ் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மானியத்திலிருந்து நூற்றுக்கு 77 அதாவது ரூபா 385,380, 2102 செலவின விடயத்தின் கீழ் வீட்டுத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த மானியத்திலிருந்து நூற்றுக்கு 21 அதாவது ரூபா 649,768 மற்றும் 1404 செலவின விடயத்தின் கீழ் குத்தகை மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களின் குத்தகை கட்டணமாக ஒதுக்கப்பட்டிருந்த மானியத்திலிருந்து நூற்றுக்கு 50 அதாவது ரூபா 223,157 செலவிடப்படாது வருட இறுதியின் போது மீதியான விடுவிப்பதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. | நிறுவன மூலதன செலவினங்களை இயன்ற அளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதனால் திறைசேரியினால் பணம் விடுவிப்பதனை கட்டுப்படுத்தப் பட்டமையினால் 2104 செலவின விடயத்தின் கீழ் நிர்மாண பணிகளின் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு இயலாது போயின வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவினை மேற்கொள்ளும் பெறுகை செயற்பாடுகள் முடிக்கப்பட்டு 2021.11.19 மேற்கொள்ளப்பட்ட ஆணையின் பிரகாரம் உரிய காலத்தினுள் பொருட்களை விநியோகம் மேற்கொள்ளப் படாமையினால் 2102 செலவின மானியங்கள் மீதியாகின. அலுவலக கட்டிடம் சார்ந்த அத்தாட்சிப் பத்திரத்தினை 2022.02.22 பெறப்பட்டதன் விளைவாக 1404 செலவின தலைப்பின் கீழான ஓரளவு மானியம் மீதியாகியது. | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3.** **செயற்பாட்டு மீளாய்வு**

**3.1** **வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. படிவத்தின் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அது தொடர்பாக கீழுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் தாபனப் பிரிவு ஒழுக்காற்றுப் பிரிவு, நியமனப் பிரிவு, மற்றும் பதவி உயர்த்தும் பிரிவு ஆகியவற்றினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கையினை மாத்திரம் அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டினுள் பிரிவுக்கும் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் (கருமங்கள்) எண்ணிக்கை அம் முறைப்பாடுகள் (கருமங்கள்) ஊடாக நிறைவேற்றப்பட்ட அளவினை மற்றும் மேற்கொண்டு எஞ்சியுள்ள அளவு ஆகிய தகவல்களை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை அதன்படி சம்பந்தப்பட்ட அறிக்கையினுள் மீளாய்வாண்டின் செயலாற்றல் மட்டத்தினை கவனத்தில் கொண்டு பார்க்கும் அளவிலான விடயங்கள் உள்ளீர்க்கப் பட்டிருக்கவில்லை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆண்டின் செயலாற்றல் மட்டத்தினை கவனத்தில் கொண்டு பார்க்கும் அளவிலான விடயங்கள் அறிக்கையினுள் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மேன்முறையீட்டு பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற மேன்முறையீட்டு அளவினை எண்ணிக்கை அளவில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவதானிப்புக்கள் | மேன்முறையீட்டு பிரிவுக்கு கிடைக்கப்பெறும் மேன்முறையீடு தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து அறிக்கைகள் கோரப்பட்ட | ஆண்டிற்கான செயலாற்றல் மட்டத்தினை கவனத்திற் கொண்டு பார்க்கக் கூடிய போதிய |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பரிந்துரையுடனான அறிக்கைகள் கோரப்பட்ட மேன்முறையீட்டு எண்ணிக்கையினை மற்றும் செயற்பாடுகள் முடிக்கப்பெற்ற மேன்முறையீட்டு அளவினை சமர்ப்பிக்கும் போது அவை மீளாய்வு ஆண்டினது மற்றும் முன்னைய ஆண்டுகளினது மேன்முறையீட்டு அளவினையும் உட்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அக்காரணத்தினால் அப்பிரிவின் மீளாய்வாண்டின் செயலாற்றல் மட்டத்தினை நிர்ணயிப்பதற்கு போதிய அளவிலான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | போதிலும் அவ்வாண்டினுள்ளேயே அவ் அறிக்கைகள் கிடைக்கப் பெறாமையினால் அவதானிக்கப்படுவதுடன் அக்காரணத்தினால் மீளாய்வு ஆண்டின் செயலாற்றலினை அளந்து பார்ப்பதாக இருந்தால் அவ்வறிக்கைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஏனைய அரச நிறுவனங்கள் செலவிடப்படும் காலத்திற்கேற்ப செயலாற்றலினை தீர்மானிக்கப்படுவதனை அவதானிக்கின்றேன். | அளவிலான விடயங்கள் அறிக்கையினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | கல்விச் சேவைக் குழு மற்றும் சுகாதார சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டு தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பணிகளின் அளவினை மாத்திரம் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு மீளாய்வு ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற பணிகள் மற்றும் அவற்றில் மீளாய்வாண்டினுள் முடிக்கப்பட்ட பணிகள் தொடர்பாக தகவல்கள் அறிக்கைளில் குறிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் முன்னைய வருடங்களிலிருந்து தொடர்ந்து வரும் கருமங்கள் மற்றும் வருட இறுதியில் மீதியாய் உள்ள கருமங்களையும் அக்கருமங்களின் கால நிர்ணய பகுப்பாய்வினையும் அறிக்கையில் சமர்ப்பிக்காமையினால் சம்பந்தப்பட்ட பிரிவின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கு போதுமான அளவில் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரக் குழு தொடர்பாக மாத்திரம் மீளாய்வு ஆண்டு தொடக்கத்தில் 367 கடிதங்கள் இருந்தன. 5264 கடிதங்கள் வருடத்தினுள் கிடைக்கப் பெற்றதுடன் 5477 கடிதங்களுக்கு வருடத்தினுள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருடத்திற்கான செயலாற்றல் மட்டத்தினை கவனம் செலுத்திப் பார்க்கக் கூடிய போதிய அளவிலான விடயங்கள் அறிக்கையின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவிற்கு சொந்தமான 02 வாகனங்கள் வருடம் முழுதும் செலுத்தப்படாது இருந்ததுடன் அவ்வாகனங்களின் பராமரிப்புக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 37,315 செலவிடப்பட்டிருந்தது. | 02 வாகனங்களும் பழுதுபார்ப்பற்காக இடப்பட்டு உள்ளன. | சொத்துக்கள் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 யூலை 25 ஆந் திகதிய தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 02/2017 பிரகாரம் இறுதி விளைவுகள் மற்றும் சீராக்கப்பட்ட பிரதான செயலாற்றல் காட்டிகள் (KPIS) தயாரிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் ஆணைக்குழுவினால் செயலாற்றல் காட்டிகளினை இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் 2004/49 மற்றும் 2017.02.01 திகதிய அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவாக இக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் தன்மையின்படி எப்பொழுதும் செயலாற்றலின் அடிப்படையாக அமைவது சம்பந்தப்பட்ட கோடு அமைச்சினால் குழுவிற்குப் பெற்றுக் கொடுக்கப்படும் கருமங்களின் அளவினை பொறுத்து அமைவதனால் பிரதான செயலாற்றுகை காட்டிகளை வருட ஆரம்பத்தில் தயாரிப்பது நடைமுறையில் மேற்கொள்ளக்கூடியதாக இல்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயலாற்றல் காட்டிகளினை இனங்காணப்படல் வேண்டும். |

## 4. பேண்தகு அபிவிருத்திகளினது குறிக்கோள்களினை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 யூலை 25 ஆந் திகதிய இலக்கம் 02/2017 கொண்ட வரவு செலவு சுற்றறிக்கையின் பிரகாரம் | பேண்தகு அபிவிருத்தி குறிக்கோளினை அடைந்து கொள்வதனை இவ் ஆணைக்குழுவுடன் நேரடியாக | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆணைக்குழு பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களினை தேசிய அபிவிருத்தி தந்திரோபாயத்துடன் சேர்த்து வரிசைப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயலாற்றல் அறிக்கையினுள் பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோளினை தொடர்பு இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. | தொடர்புபடுத்திக் கொள்வது நடைமுறை சாத்தியமாகாது | |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மூத்த மட்டத்திலான 04 பதவிகள், மூன்றாம் மட்டத்திலான 05 பதவிகள் மற்றும் முதலாம் மட்டத்திலான 06 பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்ட அதிகாரியினை சேர்த்துக் கொள்ளும் நேர்முக பரீட்சையினை நடாத்துவதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிர்வாக சேவையில் 1 தரத்தில் காலியாக உள்ள இரு பதவிகளின் பணிகளை மேற்கொள்வதற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் காலியாக உள்ள மற்றைய பதவிகளுக்காக புது ஆட்சேர்ப்புக்களிலிருந்து அதிகாரிகளை இணைத்துக் கொள்ளும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவல் மற்றும் தொலைத்தொடர்பு உதவி பணிப்பாளர் பதவிக்கும் பதில் அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) பதவிக்காக பதில் பணிபுரிவதற்கான அடிப்படையில் அதிகாரியொருவரை இணைத்துக் கொள்வதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |